# இந்தியாவில் மார்க்சீயம்

## “கார்ல் மார்க்சு ஒரு நவநாத சித்தரே!”



**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்**
**அவர்கள் அருளிய**

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**மாசி மாத வெளியீடு (March 2016)**
**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,117**

காணிக்கை ரூ.10/-

# உள்ளுறை

1. இந்தியாவில் மார்க்சீயம்.

2. கார்ல் மார்க்சு நவநாத சித்தராக அறிவிக்கப் பட்டது ஏன்?

3. கார்ல் மார்க்சு ஒரு நவநாத சித்தரே! - செம்மலர் பத்திரிகைக்கு அளித்த விளக்க மடல்.

4. பழனியாண்டவர் பற்றிய குருபாரம்பரியச் செய்தி. (பழனி மலை மீது நிற்கும் பழனியாண்டவர் முருகன் அல்ல!)

5. மூன்றாவது விடுதலை.

6. பதினெண்சித்தர்கள் சுட்டிக் காட்டும் பாவப் பட்டியல்.

7. அருளாட்சி உறுதிமொழி.





**கார்ல் மார்க்சு**
**(Karl Marx)**

**தாய் நாடு:** செர்மனி, ஐரோப்பா
**அதிக காலம் வாழ்ந்த இடம்:** இலண்டன், இங்கிலாந்து.
**இறப்பிடம்:** இலண்டன்
**காலம்:** 1818 – 1883.

**பிரடெரிக் ஏங்கல்சு**
(Friedrich Engels)

**தாய் நாடு:** செர்மனி, ஐரோப்பா
**அதிக காலம் வாழ்ந்த இடம்:** இலண்டன், இங்கிலாந்து.
**இறப்பிடம்:** இலண்டன்
**காலம்:** 1820 – 1895.

# <u>இந்தியாவில் மார்க்சீயம்</u>

**- <u>சித்தர்</u> -**

*[குருதேவர், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் எழுதியருளிய 'இந்தியாவில் மார்க்சீயம்' என்ற பெரிய நூலின் இறுதிப் பகுதி மட்டும் இங்குத் தரப்படுகின்றது. முழுக் கட்டுரையைப் படிக்க வேண்டுபவர் 'books.gurudevar.org' என்ற வலைத்தளத்தில் <u>குருதேவர்</u> அறிக்கைகளில் இருந்து படிக்கலாம்.]*

... ... பொதுவுடைமைத் தத்துவத்தின் பிறப்பும், வளர்ச்சியும் கார்ல் மார்க்சு, பிரெடரிக் ஏங்கல்சு என்ற இரு பெரும் மூதறிஞர்களால், மாமேதைகளால், சிந்தனைச் சிற்பிகளால் நிகழ்ந்திட்டது. ஏங்கல்சு மிகமிகப் பெருந்தன்மையுடன் தன்னுடைய ஆசானும் நண்பனுமான கார்ல் மார்க்சுக்கு பொதுவுடமைத் தத்துவத்தை ஈன்றெடுத்த எல்லாப் பெருமைகளையும் காணிக்கையாக்குகின்றார். ஆனால் ஏங்கல்சினுடைய உய்த்துணர்வு ஆற்றல், அறிவாற்றல், உணர்வு ஆற்றல், எண்ண ஆற்றல், சிந்தனையாற்றல், பேச்சாற்றல், எழுத்தாற்றல்.... முதலிய அனைத்தும் சேர்ந்துதான் கார்ல் மார்க்சையும் அவரது கருத்தையும் வாழ வைத்தன என்று கூறினால் அது மிகையாகாது.

இதைச் சற்று நேரடியாகவும், வெளிப்படையாகவும் கூற வேண்டுமேயானால் ஏங்கல்சு இல்லாவிட்டால் கார்ல் மார்க்சு உயிருடன் வாழ்ந்திருக்கவே முடியாது. மார்க்சு குப்பைக் கூளங்களாக விட்டுச் சென்ற கையெழுத்துப் பிறதிகளை முறைப்படுத்தி, வகைப்படுத்தி, தொகுத்து, விரிவுபடுத்தி, முழுமைப்படுத்தி 'மூலதனம்' எனும் நூலின் இரண்டாவது, மூன்றாவது பகுதிகளை உருவாக்கி உலகுக்கு கொடுத்த பெருமை ஏங்கல்சையே சேரும்.

ஏங்கல்சின் பேருதவி யிருந்தும் கூட கார்ல் மார்க்சு வறுமையின் கோரப் பிடிப்பில் சிக்குண்டு, வதையுண்டு எல்லையில்லாத் துன்பத்தை

அனுபவிக்கத்தான் நேர்ந்தது. வறுமைத் துயரம் தாங்காமல் கார்ல் மார்க்சு தனது குழந்தைகளை அனாதை விடுதியில் சேர்த்து விட்டு, தான் மட்டும் எங்காவது எழுத்தர் வேலை கிடைக்காதா? என்று வேலை தேடியலைந்தது உண்டு. அவரது வாழ்நாளில் கடைசி சில ஆண்டுகள் தவிர அவர் வசதியான இடத்தில் வாழ்ந்ததும் இல்லை, வயிறார உண்டதும் இல்லை. அவர் தனது மேல் கோட்டையும், குழந்தைகளின் காலணிகளையும் கூட விலைக்கு விற்று வாழ வேண்டிய கொடிய, வறிய வாழ்க்கையை வாழ்ந்திட்டார்.

இப்படியெல்லாம், கொடிய வறுமையைச் சந்தித்த அவர் வறுமையிடம் இருந்து தானும், தன்னைச் சார்ந்தவர்களும் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று தன்னலத்தோடு எண்ணவோ, எண்ணிச் செயல்படவோ முற்படவில்லை. அவர் பரந்து விரிந்து பட்ட அருள் உள்ளத்தோடு இம்மண்ணுலகில் யாருமே வறுமையால் தாக்கப்பட்டு துன்புறக் கூடாது என்று எண்ணி அந்த எண்ணம் செயலாவதற்குரிய சிந்தனைகளைச் சிந்தித்துக் கண்டறிந்தார். ‘தன் மகன் பிறந்தபோது தொட்டில் வாங்கவும் பணமில்லை; அம் மகன் இறந்தபோது சவப்பெட்டி வாங்கவும் பணமில்லை....’ என்று வருந்தக் கூடிய வறுமையான வாழ்க்கையை வாழ்ந்த **கார்ல் மார்க்சுதான் சமத்துவச் சகோதரத்துவப் பொதுவுடைமைத் தத்துவத்துக்குத் தொட்டிலையும், சர்வாதிகார முதலாளித்துவத்துக்குச் சவப்பெட்டியையும் செய்து முடித்திட்டார்**.

இப்படி மார்க்சு செல்வக் குடும்பத்தில் தோன்றிய போதிலும் அவனின் இளமைப் பருவம் தொழிலாளர் நலன்களைப் பற்றி சிந்திக்க வைத்துக் கொண்டிருக்கும் காலமாக இருந்தது. மேலும், இளைய ஏகலியர்களுடன்# இணைந்ததால் சிந்தனை சத்தியைப் பெற்றதோடு மட்டுமல்லாமல்; அரசியல், தத்துவம், பொருளாதாரம், மொழியியல் .... துறைகளைப் பற்றி நன்கு கற்க வைத்தது. இந்தத் துறைகளின்

---

# Young Hegelians = Left Group of followers of German Philosopher Hegel.

ஆரம்பமும், வளர்ச்சியும் சமுதாயத்தைத் தழுவியே இருக்கின்ற காரணத்தினுல் அவரின் கண்ணேட்டமும் சமுதாயத்தை விட்டு நீங்காதல்லவா?

மேலும், விஞ்ஞான வளர்ச்சிகள், சமுதாயத்தில் மண்மூடிப் போன அறியாமைக் கேள்விகளுக்கு விளக்கம் மட்டுமல்ல; விளக்கமானதொரு தொடர் வழியையும் காட்டிற்று. மேலும், அவருக்குத் தொடர்ந்து ஏற்பட்ட வாழ்வியல் தோல்விகள் வெறும் சமுதாயச் சுரண்டலைப் பற்றியும், வறுமையைப் பற்றியும், பிணியைப் பற்றியும், அதிகார வர்க்கத்தைப் பற்றியும், ஆட்சியியலின் கட்டற்ற ஒழுங்கமைப்புப் பற்றியும் பல எண்ணவோட்டங்களைத் தவிர்க்க முடியாமல் தள்ளி விட்டதில் ஐயமுண்டோ!

மேலும், பாலபருவத்திலேயே தனது எதிர்கால வாழ்வைப் பற்றி திட்டவட்டமாக உரைத்ததையும் நினைவு கூர்தல் வேண்டும். அது அவரின் கருத்தோட்டத்தை மென்மேலும் வளர்ச்சியுற வைத்தது, அப்பொழுது வாழ்ந்த பல தெய்வீகக்-கருத்து-முதல் வாதிகளின் சொற்போர்கள் இவரை மென்மேலும் பண்படுத்தியது. ஆனுல், எப்படி மார்க்சின் பின்னணி வாழ்க்கையை உணராமல் மார்க்சீயத்தை உணரமுடியாதோ; அவ்வாறேதான் ஒரு நாட்டின் குடிமகனின் பிறச்சினைகளை, வாழ்வியல் பின்னணிகளை உணராமல் அவனுக்கு நேரடியாக மார்க்சீயத் தத்துவத்தைப் போதித்தால் அது எடுபடாது.

இதை எப்படி விளக்கலாமென்றுல் 1872 செப்டம்பர் 1 முதல் 7ஆம் நாள் வரை தொடர்ந்து ‘ஏக்’ (The Hague) நகரில் நடைபெற்ற முதலாவது இண்டர்நேசனலின் ஐந்தாவது மாநாட்டில் மார்க்சும், ஏங்கல்சும் வலியுறுத்தி சட்டமாக்கியது இதைத்தான்: ‘.... ஒவ்வொரு நாட்டிலும் சுயேச்சையான; அந்தந்த நாட்டின் உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில், ஆனுல் கம்யூனிசப் பாதையை நோக்கி மனித குல விடுதலை செல்லக் கூடிய வகையில் அமைக்க வேண்டும்’. இப்படி, மார்க்சே, ‘ஒவ்வொரு நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனின் உணர்வுகளுக்கும், மொழிக்கும், பண்பாட்டிற்கும் உரிய

முக்கியத்துவம் அளிப்பதையே கூட கம்யூனிசத்தின் உரிய, உயரிய தத்துவம்' என்கின்றுர்.

மார்க்சிற்கு ஏற்பட்ட சமுதாய நெருக்கடி அவரை சமுதாயப் பிறச்சினைகளை அதாவது, மனிதகுலப் பிறச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க வைத்ததே தவிர, ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளும், புறமும் உலவும் ஆன்மநேய உணர்வுகளை அவரால் ஆராய்வதற்கு இயலவில்லை; காரணம் அவரின் சிந்தனை மக்களை, மனித குலத்தை வறுமையிலிருந்து எப்படி மீட்பது? என்பது பற்றித்தான் இருந்ததேயொழிய தனிமனிதனைப் பற்றியச் சிந்தனைக் குறைவு அவருக்கு உண்டு.

மேலும் மனித உயிர்களைப் பற்றியும், அவற்றின் பரிணும வளர்ச்சிப் பற்றியும், முற்பிறப்பு மறுபிறப்பு பற்றியும் ... எவ்விதமான குறிப்புக்களும் அவருக்கு கிடைத்திட்ட மத நூல்களில் இல்லை. குறிப்பாக இந்து சமயமான சித்தர் நெறியில் அவருக்கு ஆழ்ந்த அறிவோ, தெளிவான கருத்துக்களை எடுத்தியம்பக் கூடிய நூலோ, அல்லது எடுத்து ஓதக்கூடிய குருவோ இல்லை. எனவேதான் நம் தமிழகத்தின் ஆணிவேரெனத் திகழும்; முழுக்க முழுக்க பகுத்தறிவுக் கோட்பாட்டில் இயங்கும் **'சித்தர்நெறி'** கேட்கும் கேள்விகளுக்கு மார்க்சினுல் பதில் சொல்ல இயலவில்லை.

மேலும் கிறித்துவ மதமோ, இசுலாம் மதமோ, புத்த மதமோ இயற்கையில் உருவான ஒன்றல்ல, அவை தனிமனிதர்களால் உருவாக்கப்பட்டவை. எனவே, மனிதன் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டி அதை ஒடிப்பது என்பது மார்க்சிற்கு எளிதாகப் போய்விட்டது. ஆனுல் இந்து மதத்தின் சாராம்சங்கள் அறிவுப் பூர்வமாகவும், அனுபவத்தின் வாயிலாகவும்; மேலும் தனிமனிதன் ஒருவனுலன்றி பலரால் உணரப்பட்டும்; உணர்ந்து வடிவப்பட்டும் உருவாக்கப்பட்டதுதான் இந்து மதம். இன்னும் விளக்கிக் கூறுவோமானுல், மற்ற மதங்கள் இந்த அளவிற்கு வேதங்களையோ,

மறைகளேயோ.... தோத்திரச் சாத்திரங்களேயோ... விளக்க முறைகளேயோ, செயல் முறைகளேயோ.... பெற்றிருக்கவில்லே.

நமது நாயன்மார்களும், ஆழ்வார்களும், மற்றும் சமயப் பெரியார்களும் தன்னலமின்றி உழைத்தார்கள்; சமயப் பொது நோக்கினே சமுதாய அளவினில் மாற்ற முயன்ருர்கள் என்பதை இந்து சமய வரலாற்றை உணர்ந்த எவரும் மறுக்க இயலுமா?...

இங்ஙனம் போன்ற எனது ஆழ்ந்த சிந்தனேகள் எனது தந்தையிடம் வெளிப்பட்டன. அவர் மட்டுமின்றி மார்க்சின் தத்துவ முத்துக்கள் கூட இவற்றுக்கு விடையிறுக்க மறுத்து விட்டன. நான் நோற்ற தவங்களும், வேள்விகளும், பெற்றிட்டப் பயிற்சிகளும், முயற்சிகளும், அனுபவங்களும், வறுமையில் அடைந்த தத்துவங்களும், வாழ்க்கையின் கோடியில் உணர்ந்த உணர்வுகளும்தான் என்னே முழுக்க முழுக்க மத நம்பிக்கை உள்ளவனுக்கின.

இதை எப்படி என்ஞல் வலியுறுத்திக் கூற முடிகின்றது என்ருல்; சிறு வயது முதலே என்னே என் தந்தை மார்க்சைப் பற்றியும், ஏங்கல்சைப் பற்றியும் கூறிக் கூறி வளர்த்தார். அந்த நினேவுகளும், எண்ணவோட்டங்களும் பசுமரத்தாணி போல் எனது நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருந்தன. அந்த உணர்வோட்டங்களின் நிழலாட்டங்களின் இடையில்தான் நான் மதப்பயிற்சிகளேப் பெற்றேன் என்பதனே எவரும் மறக்கக் கூடாது.

மார்க்சுக்காவது அன்பு மனேவி, அறிவார்ந்த நண்பன் உடனிருந்தனர். ஆனுல் <u>எதுவுமற்ற வறுமையிலும், வாழ்வின் சகதியிலும் உழன்று திரிந்தவன் நான் என்கின்ற போது; மனித குலத்தில் நாள் தோறும் மட்டுமின்றி, காலந்தோறும் நடைபெற்று வரும் அடிமைவர்க்கத்தையும், அறியாமையையும் என்ஞல் காண முடிந்தது. புத்தக வாயிலின் மூலம் நான் கண்ட சமுதாயத்திற்கும்; நாடோடியாய், காடோடியாய், கடலோடியாய் திரிந்த நேரத்தில் நான் கண்ட சமுதாயத்திற்கும் உள்ள இடைவெளியை அல்லது வரையறுக்க முடியாத அளவிற்கு உள்ள வேறுபாட்டினேக் காண முடிந்தது</u>.

இத்தகைய அடிப்படை உண்மையை நிச்சயமாக, உறுதியாக கார்ல் மார்க்சினுல் பெற்றிருக்க முடியாது. என்னுடைய வாழ்க்கை தனிமனித வாழ்க்கையல்ல. மனிதகுலம் முழுவதுமே தன்னை ஒருமுறை திரும்பிப் பார்த்துக் கொள்ளத் தக்க ஒன்ருகும். இவ்வளவு அடிகளையும், இடிகளையும் தாங்கி மீண்டும் சமுதாயத்திற்குள் வந்துள்ளேன் நான் என்ருல், என்னுடைய தன்னல வாழ்விற்காக அல்ல; தடுக்க முடியாத அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சமுதாய நலம் தேடித்தான். எப்படி மார்க்சு கொடிய கொந்தளிக்கும் கடலலை போல் வறுமையும், பிணியும் வந்துற்ற போதும் அவரால் மனிதகுல நன்மை பற்றி சிந்திக்க முடிந்ததோ, அவ்வாறேதான் என்னுடைய வாழ்க்கையும் உள்ளது.

மார்க்சு வகுத்துத் தந்த சிந்தனைப் பாதைதான் இன்று என்னை மூடநம்பிக்கையிலிருந்தும், அறியாமையிலிருந்தும், பிடிவாத வெறித் தன்மையிலிருந்தும் மீட்டுத் தமிழ்ச் சமுதாய நலன் நோக்கி, மனித குல நலன் நோக்கி என்னை அயராது, அல்லல் வந்துற்ற போதும் கலங்காது உழைக்க வைக்கின்றது. மார்க்சின் சிந்தனைதான் 'சித்தர்நெறி'யின் தெய்வீகப் பயிற்சிகளையும், பயன்களையும் எல்லோரும் பெறும்படியும், புசிக்கும்படியும் வைக்கின்றது; அல்லது சமுதாயத்திற்கு அஞ்சாது, கலங்காது தர முன்வர வைத்துள்ளது. என்னை மென்மேலும் பரந்து விரித்துபட்ட செயல் வீரனுகவும்; மறைந்து, திரிந்து கிடக்கும் தத்துவச் சுரங்கத்தை! ஆர்வத்தோடும், அளப்பரிய நம்பிக்கையோடும் வாரிவாரி வழங்கிடவும் வைக்கின்றது என்பதைக் கூறிக் கொண்டு; என்னுடைய வளர்ச்சி என்னை என் தந்தை நினைத்து வளர்த்ததற்கு முரணு? என்ற வினுவை உங்களிடமே விடுகின்றேன்.

கார்ல் மார்க்சு இறந்தவுடனேயே மார்க்சீய மறுப்புக் கருத்துக்கள் எழுந்தன:

"'மார்க்சீயம்' என்பது காலாவதியாகிவிட்ட ஒரு தத்துவம்; அத்தத்துவம் மார்க்சின் வாழ்க்கைக் காலத்தில் இருந்த அழுத்தத்திஞல்

அல்லது தேவையினுல் உண்டாகிய ஒன்ருகும். அந்த சூழ்நிலைகள் மாறிவிட்டன. இனி ‘மார்க்சீயம்’ தேவையில்லை;

“மார்க்சீயவாதிகள் மார்க்சைக் கடவுளாகவும், மார்க்சீயத்தை வேதமாகவும் ஆக்கி ஒரு புதிய மதத்தைத்தான் உருவாக்கி வருகின்ருர்கள். மதம் எப்படி மயக்கத்தைத் தரும் ஒரு போதைப் பொருள் என்று மார்க்சீயவாதிகளால் குற்றம் சாட்டப்பட்டதோ; அதேபோல் மார்க்சீயமும் ஒருவித மயக்கத்தைத் தரும் போதைப் பொருளாகத்தான் ஆகிவிட்டது;

“மதம் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டை நியாயப்படுத்தி முதலாளித்துவம் சுரண்டலுக்கு ஒப்புதலும், சம்மதமும் வழங்கியது போல; மார்க்சீயம் தொழிலாளி-முதலாளி என்ற வேறுபாட்டை நியாயப்படுத்தி இரண்டு பேருக்கிடையே பகையும், சண்டைச் சச்சரவுகளும் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஒப்புதல் அளிக்கின்றது. அதாவது முன்பு மதத்தால்தான் சமுதாய அமைதி குலைகிறது என்ற குற்றம் சாட்டப்பட்டது. ஆனுல் இன்றைய நிலையில் மார்க்சீயத்தால்தான் அமைதியும், ஒற்றுமையும் குலைக்கப் படுகின்றது;

“மார்க்சீயத்தைத் தொடர்ந்து வாழ அனுமதித்தால் தொழிலாளி-முதலாளி உறவுகளும், உரிமைகளும் தொடர்ந்து முறிவுக்கும், நெரிசலுக்கும், நலிவுக்கும், அழிவுக்கும் உள்ளாகி உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுப் பொருளாதார முன்னேற்றமும், சமுதாய முன்னேற்றமும் தேக்கம் பெற்றுவிடும்;

“மார்க்சீயம் தனது பாட்டாளி வர்க்க உரிமைக்காகப் போரிட்டே தீர வேண்டும் என்று கூறுகின்றது. அதே நேரத்தில் போர் முதலாளித்துவச் சுரண்டலுக்கு வழி வகை செய்கின்றது என்று போரை குறை சொல்லுகின்றது. இக்குழப்பவாதத்தின் எல்லையாக பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுதான் உலகில் சமாதான, சகவாழ்வை உருவாக்க முடியும் என்ற கருத்து மார்க்சீயத்தில் கூறப் பட்டிருக்கின்றது. எனவே மார்க்சீயம் பயனற்றது மட்டுமல்ல, தேவையற்றதும் ஆகும்;

“மார்க்சீயத்தால் எந்தக் குறைகளும், குழப்பங்களும், தேக்கங்களும், முடக்கங்களும், சுரண்டல்களும்... தீர்க்கப்படப் போவதேயில்லே. மார்க்சியம் சொல்லுகின்ற பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு என்பது மதவாதிகள் சொல்லுகின்ற சொர்க்கத்தை விட மோசமானது; நம்ப முடியாதது;

“மார்க்சீயத்தின் பெயரால் ஆங்காங்கே உள்ள விரோதச் சத்திகள், தீயசத்திகள், வெறி நிறைந்த சத்திகள், கொள்ளேக்கார கும்பல்கள்... அமைதியான அரசாங்கம் நடைபெற விடாமல் கலவரங்களும், குழப்பங்களும் செய்கின்றன. அதாவது தன்னல வெறி கொண்ட சுயநலக் காரக் கும்பல்கள் அல்லது கூட்டங்கள் எல்லா நாடுகளிலுமே அரசாங்க விரோதப் போக்கை வளர்க்க மார்க்சின் பெயரைப் பயன்படுத்திக் கொள்கின்றன ...”

என்றிப்படி **மார்க்சீய மறுப்புக் கருத்துக்கள், எதிர்ப்புக் கருத்துக்கள்** உலகெங்கும் துவங்கின.

கடவுளின் அவதாரங்கள், தூதுவர்கள், அடியார்கள், நேரடி வாரிசுகள்... மக்களேக் காக்கத் திடீர் திடீரென்று தோன்றி வழித்தோன்றல்கள் இன்றிச் செயல்பட்டு மறைந்தது போல கார்ல் மார்க்சு மறைந்து விடவில்லே. அவன் தன்னுடைய வாழ்வில் அனுபவித்த துன்பங்களேயும், துயரங்களேயும் போல் வேறு எந்த ஒரு மனிதனும் துன்பப்படக் கூடாது என்று முடிவு கட்டினன். அதனுல் அவனுக்கு மானுட இனத்தின் மீது அளப்பரிய ஆர்வமும், அன்பும் பிறந்தது. அதற்காக அல்லும் பகலும் சிந்தித்து, உழைத்துப் பல முடிவுகளேக் கண்டறிந்தான். அந்த முடிவுகள் உலகில் எந்தப் பகுதியிலும் முளேத்துக் கிளேத்து வளரக் கூடிய தத்துவ வித்துக்களாயின. அந்தத் தத்துவ வித்துக்கள் தரும் விளேச்சல்கள் எல்லாப் பசிகளேயும் போக்கும் விருந்தைத் தரக்கூடியன.

எனவே அவனுடைய விதைகளே விதைத்து விளேச்சலேக் காண விவசாயிகள் உலகெங்கும் தோன்றினுர்கள். அவனேத் துறந்த பிறந்த மண் கூட அவன் இறந்த பிறகு அவன் தத்துவ வித்துக்களேப்

பயிராக்கும் விவசாய நிலமாக மாறிவிட்டது. கார்ல் மார்க்சை கடவுளாக மாற்ற விட்டாலும்; கடவுளுக்கெல்லாம் கிடைக்கின்ற சிறப்புக்களை விட மிகுந்த சிறப்பு அவனுக்குத் தரப்பட்டுக் கொண்டே வருகின்றது. தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ மார்க்சீயம் வெற்றி பெற்ற நாடுகளில் எல்லாம் மார்க்சு கடவுளாகவே மதிக்கப் படுகின்றான். இங்குதான் '**இந்தியாவில் மார்க்சீயம்**' உருவாகின்றது.

இந்தியாவில் உள்ள மார்க்சீயவாதிகள் மேலைய நாட்டைப் பின்பற்றி இந்து மதத்தைக் கடுமையாக விமர்சித்து மதவுணர்வுமிக்க பெரும்பாலான பொது மக்களின் வெறுப்பையும், மறுப்பையும் தேடிக்கொண்டு விட்டார்கள். எனவே 'மார்க்சு', 'மார்க்சீயம்', 'கம்யூனிசம்'.... போன்ற சொற்கள் இந்திய மக்களுக்கு வேண்டாதவைகளாக, தேவையில்லாதவைகளாக, வெறுப்பு மிக்கவைகளாக.... தோன்றி விட்டன. இந்தியாவில் உள்ள மதவுணர்வுகள் நிறைந்த மக்கள் தங்களுடைய மதத்தைப் பலியிட்டுப் பொருளாதாரச் சமவாழ்வை பெறத் தயாராயில்லை.

அதாவது, காசுக்காகக் கடவுளை விற்கத் தயாராயில்லை. இந்தப் பேருண்மையை இன்றைய இந்திய மார்க்சீயவாதிகள் இன்னமும் உணர மறுக்கின்றார்கள். 'இரசியாவிலும், சீனாவிலும், பிற கம்யூனிச நாடுகளிலும் மதத்தை வெற்றி கண்டது போல்; இந்தியாவிலும் மார்க்சீயம் மதத்தை வெற்றி கண்டுவிடும்' என்று மார்க்சீயவாதிகள் பகற்கனவு காண்கின்றார்கள். இன்னமும் அவர்கள் ஏட்டுலக வாதியாக இருக்கிறார்களே ஒழிய உலகியல் நாட்டு நடப்பு வாழ்வியலைப் புரிந்து கொள்ளுகின்றவர்களாக மாறவில்லை, மாறமாட்டார்கள்.

இக்கருத்துக்களை என் தந்தையின் காலத்திலிருந்தே வலியுறுத்திக் கூறி வருபவனே நான். **மேலைய நாடுகளில் கம்யூனிசத்தால் வெற்றி கொள்ளப்பட்ட மதமெல்லாம் வெறும் அறிவியல் பூர்வமான மதங்களே!** இன்னும் சொல்லப் போனால் அவைகள் வரலாற்றுக்குட்பட்ட மதங்களே!. அதாவது அவற்றின் தோற்றமும், வளர்ச்சியும், உள்ளீடும், அடிப்படையும், உயிரும்.... மிகத் தெளிவாக கணிக்கப்படக் கூடிய

நிலையிலேயே உள்ளன. எனவே அவற்றைத் தாக்க, தகர்க்க மிகமிக எளிதான தத்துவங்களும், சாதனங்களும் மார்க்சீயவாதிகளால் கண்டுபிடிக்கப்பட்டன.

அதாவது, மேற்குறித்த மதங்கள் உலகியல் நடைமுறையில் அதிகமாக ஒன்றியிருந்தன; மிகுந்த பொருளாதார வளத்தைப் பெற்றிருந்தன. அதன் குருமார்கள் செல்வச் செழிப்பான வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தேவாலயங்களும், மடாலயங்களும் முதலாளித்துவத்தின் பாசறைகளாக இருந்தன. அவற்றின் சடங்குகளும், சாத்திறங்களும், விழாக்களும் முதலாளித்துவச் சுரண்டலை நியாயப்படுத்தியும், நேர்மைப்படுத்தியும் பேசின.

எனவே, எமாற்றப் பட்டவர்களும், சுரண்டப் பட்டவர்களும். வறுமையில் வாடி வதங்கித் துன்புற்றவர்களும், வாழ்க்கைத் தேவைகளால் ஏங்கிக் கிடந்தவர்களும்.... மதத்தை எதிர்த்து முறியடிக்கத் துடிதுடித்துக் கொண்டிருந்தார்கள்; ஆனால் வழிவகை தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது மார்க்சீயம் பட்டுப் போன மரங்கள் மிகுந்த காட்டினில் நெருப்புப் பற்றியது போல் மிகமிக விரிவாகவும், விரைவாகவும் பற்றி எரிந்தது. அந்தக் காட்டுத் தீயை யாராலும் அணைக்க முடியவேயில்லை. அந்தக் காட்டுத் தீயில் அனைத்து மத அமைப்புக்களும், பீடிப்புக்களும், செல்வாக்குகளும், ஆட்சிகளும்... எரிந்து சாம்பலாயின.

ஆனால் இந்தியாவில் **‘இந்து மதம்’** எந்த வரலாற்றுக் கணக்கீட்டுக்கும் உட்படாத ஒன்றாக இருக்கின்றது. இந்துமதத்தின் தோற்றமோ, வளர்ச்சியோ, அடிப்படையோ, உள்ளீடோ, உயிர்த்துடிப்போ யாராலும் எளிதாகக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றன. கோவிலுக்குப் போகின்றவனும் இந்துவாக உள்ளான், போகாதவனும் இந்துவாக உள்ளான்; இந்துமதச் சாத்திறங்களையும், தோத்திறங்களையும் பெயரளவில் தெரிந்தவனும் இந்துவாக உள்ளான்; இந்துமதத்தை நம்புகின்றவனும் இந்துவாக உள்ளான், நம்பாதவனும் இந்துவாக உள்ளான். **இந்து மதம் குருமார்களால், பூசாரிகளால்... கட்டிக் காக்கப் படவில்லை.**

**ஆனால் இந்து மதம்தான் குருமார்களையும், பூசாரிகளையும் கட்டிக் காக்கின்றது**.

இந்துமதம் என்ற ஓர் அமைப்பை, இயக்கத்தை, தத்துவக் கோட்பாட்டை.... இந்திய மக்களின் அன்றாட நடைமுறை வாழ்விலிருந்து தனித்துப் பிரிக்கவே முடியாது. அப்படிப் பிற மதங்களையெல்லாம் பொது மக்களிடமிருந்து பிரிக்க முடிந்ததால்தான், மார்க்சீயம் அவற்றை வெல்ல முடிந்தது. எனவே, இந்தியாவில் மார்க்சீயத்தால் இந்துமதத்தை வெல்லவே முடியாது.

இந்துமதம் வெறும் அறிவியல் பூர்வமான மதமோ! அல்லது இயற்கையிறந்த தெய்வீகப் பூர்வமான மதமோ அல்ல! அல்ல! அல்ல!... **இந்துமதம் முழுக்க முழுக்க உணர்வுப் பூர்வமான மதம்**. அதுவும் ஒவ்வொரு மனிதனும் இந்துமதத்தைத் தனது அன்றாட வாழ்வில் உணர்வுப் பூர்வமாகக் கடைப்பிடித்திடும் தன்மை இம்மதத்துக்கு மிகுதியாக இருக்கிறது. எனவே, **வெறும் அறிவியல் பூர்வமான பகுத்தறிவு வாதத்தாலோ! நாத்திக வாதத்தாலோ! பொருள்முதல் வாதத்தாலோ!.... இந்து மதத்தை வெல்லவே முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது.**

இந்துமதம் ஒரு மதமே அல்ல. இதற்கு மற்ற மதங்களைப் போன்று வெறும் புராண இதிகாச வேத வலிமை மிகுதியாகக் கிடையாது. இது ஒரு சமுதாயத் தத்துவம். இன்னும் சொல்லப் போனால், இந்து மதம் இந்திய மக்களின் பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியோடு இரண்டறக் கலந்து விட்ட ஒன்றேயாகும். இதைச் சற்று அழுத்தமாக, பொதுப்படையாகக் கூற வேண்டுமேயானால்; 'இந்துமதம் ஒரு மதமல்ல; அது இந்தியப் பண்பாட்டின் நிலைக் கலனாகும்'. எனவே, இந்து மதத்தை வெற்றி கொள்ள முயல்பவர்கள் முதலில் இந்தியாவில் 'பண்பாட்டுப் புரட்சியை' உண்டாக்க வேண்டும்.

இந்தியாவில், இதுவரை இந்த உலகிலுள்ள எல்லா இனப் பண்பாடுகளும், மதப் பண்பாடுகளும், நாட்டுப் பண்பாடுகளும்.... அரசியல் ஆதிக்கத்தோடு மோதுதல்களை நிகழ்த்தி முடித்து விட்டன.

அம்மோதுதல் சிறுசிறு சிதைவுகளை நினைவுச் சின்னங்களாக ஆக்கி இருக்கின்றனவே தவிர; எந்த ஒரு குறிப்பிடத்தக்க பெரிய வெற்றியையும் பெற்றிடவே இல்லை. இப்பேருண்மையினை உணராத இந்திய மார்க்சீயவாதிகள் இந்து மதத்தைத் தாக்கித் தகர்க்கவும், பண்பாட்டுப் புரட்சியினைத் தூக்கி நிறுத்தவும் முயன்றிடுகின்றார்கள். இது எப்படி வெற்றி பெறும்?

'இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுகளின் வேர்கள் மிகமிக ஆழமாகப் பதிந்திருப்பதால் பண்பாட்டுப் புரட்சிக்கே இடமில்லை இங்கு.......' இந்த எனது வாதங்களைத் தனது கடைசிக் காலத்திலேதான் ஒப்புக் கொண்டிட்டார் என் தந்தை. அதனால்தான். அவர் "....உன் கூற்றுப்படி பார்த்தால் பொதுவுடமைத் தத்துவம் இந்தியாவில் நிலைநாட்டப்படும் பொற்காலம் உருவாகவே உருவாகாதா?...." என்று ஏக்கமும், ஏமாற்றமும் நிறைந்த குரலிலே பலமுறை கேட்க ஆரம்பித்திட்டார். அவருடைய குரலின் எதிரொலி அவருடைய நண்பர்களிடமும் கேட்க ஆரம்பித்திட்டது.......?!?!

அதற்கு ஒட்டு மொத்தமாக நானளித்த பதில் "..... இந்தியாவுக்குப் பொதுவுடமைத் தத்துவம் புதியதல்ல. இந்தியப் பண்பாட்டு மரபுப் பாரம்பரியக் கூறுகள் அனைத்துமே பொதுவுடமைத் தத்துவத்தை அடிப்படையாகத்தான் கொண்டிருக்கின்றன. ஆனால், காலப்போக்கிலும், சமய, சமுதாய, அரசியல் தோற்ற மாற்றங்களாலும் இவை ஓரளவு திரிபுற்றிருக்கின்றன. அத்திரிபுகளைச் சீர்செய்யத்தான் அவ்வப்போது சித்தர்கள், முத்தர்கள், புத்தர்கள், பத்தர்கள்.... தோன்றிடுகின்றார்கள். அப்படித் தோன்றியவர்களுள் ஒருவரே கார்ல் மார்க்சு.

வெளிநாடுகளில் கடவுள் நெறியை வித்திட்டு வளர்த்திட்ட பொதுவுடமைத் தத்துவம் சென்ற நூற்றாண்டில் மிகமிகக் கெட்டுப் போயிருந்ததால்; கார்ல் மார்க்சு அங்கே திருஅவதாரம் செய்ய நேரிட்டு விட்டது. **கன்பியூசியசு, சொராசிட்டர், இயேசு, முகம்மதுநபி, .... முதலிய திருவருட்செல்வர்களைப் போல் திருஅவதாரம் செய்தவர்தான் 'கார்ல் மார்க்சு'**... என்ற கருத்தை இந்திய

மார்க்சீயவாதிகள் ஒப்புக் கொண்டு செயல்பட ஆரம்பித்திட்டால்; இயேசு கிறித்துவின் தத்துவமும்; முகம்மதுநபியின் தத்துவமும் இந்திய மண்ணில் வேரூன்றிச் செழித்திருப்பது போல் மார்க்சீயத் தத்துவமும் வேரூன்றிச் செழித்திடும். அப்போது, மெல்ல மெல்லப் பொதுவுடமை பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கிடும்...” என்பதுதான்.

இந்தக் கருத்துக்களின் மாபெரும் விளக்கமாகத்தான் எனது ‘இந்தியாவில் புரட்சி ஏன்? எப்பொழுது? எப்படி?’ நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் என் தந்தை ஆங்கிலத்தில் **‘Revolution in India why? When and how?’** என்று எழுதிய மிகப்பெரிய நூலை அடிப்படையாகக் கொண்டு; அதன் சுருக்கமாக எழுதப்பட்ட ஒன்றேயாகும். இந்த நூல் அளவில் பெரியதாக இருப்பதால்; இதன் முடிவுரையாக எழுதப்பட்ட கார்ல் மார்க்சின் வரலாற்றுச் சுருக்கத்தை முதலில் தனித்த சிறு நூலாக அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்தேன்.

இந்த ஏற்பாட்டை முன்னின்று, துணைநின்று.... நிறைவேற்றித் தந்த நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை உரியதாக்கிக் கொள்கின்றேன்.

அன்பே சிவம்! அறிவே சிவம்! அமைதியே சிவம்!
மகிழ்வே சிவம்! சகோதரத்தத்துவமே சிவம்! சமத்துவமே சிவம்!
உழைப்பே சிவம்! உண்மையே சிவம்! பிறர்க்குஉதவுதலே சிவம்!

ஓம் திருச்சிற்றம்பலம்!

அன்பு

**அருளாட்சி நாயகம் குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.**

**//குருதேவர் அறிக்கை எண்: 36, 37, 38, 39-40-41 வரை.//**

# கார்ல் மார்க்சு நவநாத சித்தராக அறிவிக்கப் பட்டது ஏன்?

## [இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவரின் விளக்கம்]

மேலே நாட்டில் பிறந்து 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற தத்துவத்திற்கு விளக்கமாக ஏழை, எளிய, பாட்டாளி வர்க்கம் நல்வாழ்வு வாழ்வதற்குச் சிந்தித்துப் பொதுவுடமைச் சிந்தனையைக் கண்டறிந்த சிந்தனைச் சிற்பி கார்ல் மார்க்சு அவர்களை சித்தர் நெறிப்படி 'நவநாத சித்தர்' என்று சிறப்புப் பட்டம் கொடுத்து ஏற்றுப் போற்றுகிறோம் யாம்.

இந்தக் கார்ல் மார்க்சுக்கு மட்டும் பதினெண்சித்தர்களின் வரலாறுகளோ, வாழ்வியல் நெறிகளோ, சமுதாய அரசியல் சிந்தனைகளோ, உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் காணும் குறிக்கோளோ, உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு அமைக்கும் செயல்பாடோ, உலக இனங்களின் விடுதலைக் கொள்கையோ, மொழி விடுதலைக் கொள்கையோ, ..... தெரிந்திருக்குமேயானால், இவர் தனது நெறிக்குக் *கம்யூனிசம்* என்று பெயரிடாமல் **சித்தரிசம்** என்றே பெயரிட்டிருப்பார்.

இவர் உலகக் கிறித்துவ, முகமதிய மதத்தைப் பற்றித்தான் அறிந்திருந்தார். இவரால், **வடஆரியர்களின் சமசுகிருத மொழியின் இலக்கியங்களே பெரும்பாலும் படிக்கப் பட்டு; வடஆரிய வேதநெறிதான் இந்துமதம் என்று தவறாக உணரப் பட்டிருந்தது**. எனவேதான், அவர் **'இந்திய மண்ணில் புரட்சி எளிதல்ல'**,

**‘ஆங்கிலேயரின் கொடுங்கோலாட்சி முறியடிக்கப் படுவது எளிதல்ல!’** ...... என்றெல்லாம் கட்டுரை எழுதிச் சென்றிட்டார். ஆகவே மார்க்சீயச் சிந்தனைகள் எனும் வைரங்களைப் பதினெண்சித்தர்களின் தத்துவம் எனும் தங்கத்தால் செய்யப்படும் நகைகளில் பதித்து இந்திய மக்களை அழகுபடுத்த வேண்டும்.

**மார்க்சீயத்தின் கண்ணோட்டத்தை விடப் பதினெண்சித்தர்களின் கண்ணோட்டம் புரட்சி மிக்கது! புதுமை மிக்கது! சமத்துவமிக்கது! வறுமையைப் போக்கக் கூடியது! பொதுவுடமையை விளைவிக்கக் கூடியது! மனிதத் தன்மையைப் பாதுகாக்கக் கூடியது! மனித வாழ்வை இனிமையும், கனிவும், அன்பும், பண்பும், பரிவும், பாசமும், நட்பும், தோழமையும் உடையதாக ஆக்குவது! எனவேதான், சிந்தனைச் சிற்பி கார்ல் மார்க்சு அவர்களைப் புரிந்து, ‘நவநாத சித்தர்’ என்று அறிவித்து** நம்முடன் இணைத்துள்ளோம் யாம். இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் இன்னும் நம்மிடையே உள்ளார்கள் என்பது வருந்தத் தக்கதே! எனவே நன்கு படித்தறிந்து விளக்கம் கூறிப் புரிய வையுங்கள்.

மார்க்சீய வாதிகள் கூட; நாம் அவரை ‘நவநாத சித்தர்’ என்று அழைப்பதற்கு மறுப்பும், எதிர்ப்பும் தெரிவிக்கின்றனர்கள். அதாவது, முதலாளித்துவ வாதிகள் போல், மடமை மிக்க மதவாதிகள் போல் இந்த அப்பாவியான மார்க்சீய வாதிகளும் கார்ல் மார்க்சு தங்களுக்கே சொந்தமென்று உரிமை பாராட்டுகிறார்கள். இவர்களெல்லாம் “எப்படியாவது யார் மூலமாவது மார்க்சீயம் வெற்றி பெற்றால் போதும்” என்று எண்ணக் கூடிய உண்மையான பொதுவுடமை வாதிகளாக மாற்றப்பட்டேயாக வேண்டும்.

அதற்காகத்தான் நாம் பொறுப்போடும், பொறுமையோடும் பூசைக்கு **‘கதம்ப மாலை’** கட்டுவது போல், **‘கலப்பட மாலை’** மார்க்சீய சிந்தனைகளை இந்துமதத் தத்துவங்களோடு கலந்து பேச்சிலும், எழுத்திலும், அச்சிட்ட அறிக்கையிலும் கலந்து பரப்பி வருகிறோம்.

இதற்காக நமக்கு நன்றி கூற வேண்டிய மார்க்சீய வாதிகள் அப்பாவித் தனமாக நம்மை எதிர்க்கிறார்கள். எனவே, நம்மவர்கள் உணர்ந்தும், உணர்த்தியும் இந்திய மார்க்சீய வாதிகளைத் திருத்தி நம்மவர்களாக்க முற்பட வேண்டும்.

அதாவது இன்றைய நிலையில் பெரும்பாலான திராவிடக் கழகத்தவர்கள் (பெரியாரின் தொண்டர்களும், ஆதரவாளர்களும்) நம்மைப் புரிந்து, விரும்பி, நம்பி நம்மோடு செயல்பட ஆரம்பித்திருப்பது போல்; மிக விரைவில் இந்திய மார்க்சீய வாதிகள்; நமது தோழர்களாகவும், நண்பர்களாகவும், தொண்டர்களாகவும் மாறி விடுவார்கள். அதன் பிறகுதான் நாம், தென்னிந்திய அளவிலும், இந்திய அளவிலும் மிகப் பெரிய வெற்றிகளைப் பெற முடியும். இவற்றை அறிந்தும், அறிய வைத்தும் செயல்படுங்கள். **வெற்றி நமதே**.

மார்க்சீயம் மலர்ந்துள்ள இரசியாவிலேயே 70 ஆண்டுகளாகியும் மெக்கா யாத்திரை வரும் முகமதியர்களும், செருசலத்திற்குப் புனித யாத்திரை வரும் கிறித்தவர்களும் மத உரிமையோடும், பெருமையோடும் வாழுகிறார்கள் என்ற பேருண்மையை இந்நாட்டு மார்க்சீய வாதிகளுக்கு விளக்கிட வேண்டும். அப்பொழுதுதான் மாமேதையான இலெனின் “கார்ல் மார்க்சு ‘மதம் ஒரு நஞ்சு’ என்று கூற வில்லை. ‘மதம் மக்களை மயக்கும் அபின்’ என்றுதான் கூறினார். எனவே, போதைப் பொருளான மதம் அளவோடு கையாளப் படுவது தவறல்ல! ...” என்று மிகத் தெளிவாக முடிவெடுத்துச் செயல்பட்டிட்ட பேருண்மை நமது இந்திய மார்க்சீயவாதிகளுக்கு விளங்கிடும். இதில் ஐயமுள்ளவர்கள் சோவியத் நாடு இதழைப் புரட்டிப் பார்ப்பார்களேயானால் ஆண்டு தோறும் மெக்கா செல்லும் முகமதியர் பற்றிய விவரமும், பிற விவரமும் அறிய முடியும்.

கார்ல் மார்க்சு குறிப்பிட்ட, மயக்க மருந்து போன்ற மதங்களையே; மிகப் பெரிய புரட்சித் தலைவனான லெனினும் அவனது மார்க்சீய இயக்கங்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன என்கிற போது; "மதம் ஒரு சமூக விஞ்ஞானமே", "மதம் மணிசர்களை மனிதர்களாக்கிய மருந்தே" என்ற தத்துவத்தைக் கூறும் **பதினெண்சித்தர்களின் இந்துமத**த்தை [இன்றுள்ள வட ஆரியநெறி கலந்திருக்கும் பிருமணத் தலைவர்களால் வழிகாட்டப் படும் *ஹிந்துமத*மல்ல!] இந்திய மார்க்சீய வாதிகள் என்றைக்கு முழுமையாக நம்பி, விரும்பி, ஏற்றுப் போற்றி மதவாதிகளாகவே மாறி; மத வழியாகச் சமுதாய, அரசியல் மாற்றங்களை உருவாக்கும் உண்மையான செயல்நிலைக்குத் தயாராகிறார்களோ, அன்றைக்குத்தான் மார்க்சீயம் மறுபிறப்பெடுக்கும் இந்திய மண்ணில்! அன்றைக்குத்தான் மார்க்சீயக் கனவுகள் நனவாகும் இந்திய மண்ணில்!

இல்லையேல், மார்க்சீயத்திற்காக முதல் **'உலகக் கம்யூனிச இயக்கம்'** என்ற ஒன்றை நிறுவிய* [*இலெனினுக்கு முன்னால், இரசியப் புரட்சிக்கு முன்னால்; செக்கோசுலோவேக்கியா நாட்டில் இந்துக்களாகிய திரு M.P.பிள்ளையும், திரு M.N.இராயும் மார்க்சீய கனவுகளை நனவாக்குவதற்காக **'உலக கம்யூனிச இயக்கம்'** என்ற ஒன்றை (The International Communist Party) உருவாக்கினார்கள் என்ற வரலாற்றுப் பேருண்மை இந்திய மார்க்சீயவாதிகளால் மட்டும் மறுக்கப் படுவது வருந்தத் தக்கது! திருத்தத் தக்கது.] திரு M.P.பிள்ளையவர்களும், திரு M.N.இராய் அவர்களும் **'இந்திய மண்ணில் மார்க்சீய மரணம்'** (The Death of Marxism in India) என்று தொடர் கட்டுரைகளும், நூல்களும் எழுதிச் சென்ற கருத்தில் என்றைக்குமே மாற்றம் ஏற்படவே முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம்தான் எமது தந்தையாகிய காகபுசுண்டர் எனப்படும் காக்கையர் ம.பழனிச்சாமி

பிள்ளையுடனும், அவரது உற்ற தோழரான திரு M.N.இராயுடனும் நெடிய, பெரிய, தொடர் விவாதங்களை நிகழ்த்தி; **'இந்திய மண்ணில் மார்க்சீய மறுபிறப்பு'** (**The Rebirth of Marxism in the Indian Soil**) என்று தொடர் கட்டுரைகளும், நூல்களும், அறிக்கைகளும், அறிவிக்கைகளும், அஞ்சல்களும், உரையாடல்களும், விவாதங்களும், சொற்பொழிவுகளும் வழங்கிச் செயல்பட்டு வருகிறோம்.

இப்படி கார்ல் மார்க்சு இந்து மறுமலர்ச்சிக்காக இந்திய மக்களின் இன விடுதலைகளுக்காக, மொழி விடுதலைகளுக்காக, சமுதாய சமத்துவத்துக்காக, அரசியல் பொதுவுடமைக்காக இந்து மறுமலர்ச்சி இயக்கச் சிந்தனையாளர்களுள் ஒருவராக ஏற்றுப் போற்றப் படுவதை முதலில் நம்மவர்கள் நன்கு புரிந்து தெளிவடைய வேண்டும்! இதற்கு அடுத்த கட்டமாகவே நம்மிடம் விளக்கம் கேட்டு வரும் அனைத்துச் சமய சமுதாய அரசியல் கலை இலக்கியத் தொழில் வாதிகளுக்கு கார்ல் மார்க்சு எப்படி நவநாத சித்தராக ஆக்கப் பட்டுள்ளார் என்று புரிய வைத்துத் தெளிவிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம்மவர்களுக்கிடையேயும், நம்மை நாடி வருபவர்களுக்கிடையேயும் கருத்துக் குருடர்களோ, கொள்கைப் போலிகளோ, குறிக்கோள் காலிகளோ, செயல்நிலைக் கருங்காலிகளோ, துரோக விரோதச் செயல்களைச் செய்யும் கூலிகளோ ....... தோன்றாமல் தடுக்க முடியும்! தடுக்க முடியும்! தடுக்க முடியும்!

எனவே, நம்மவர்கள் யாரையும் அவசரப்பட்டோ, ஆத்திரப் பட்டோ குறை கூறி மறுத்தும், வெறுத்தும் ஒதுக்கிடாமல் பொறுப்போடும், பொறுமையோடும், அடக்கத்தோடும், அமைதியோடும், நிதானத்தோடும், சமாதானத்தோடும், ...... கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல் மூலம் செயல்படக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**//மூலம்: குருதேவர் அறிக்கை 1984 ஆண்டு மலர்.//**

# <u>கார்ல் மார்க்சு ஒரு நவநாத சித்தரே!</u>

**<u>'செம்மலர்' மாத இதழுக்கு அளித்த விளக்க மடல்</u>**

[1984 சனவரித் திங்கள் செம்மலர் மாத இதழில் (சரம் 14, மலர் 9, பக் 3-7) சித்தர் நெறியினர் கார்ல் மார்க்சை "நவநாத சித்தர்" என்று குறிப்பதையும், பெரியார் ஈ.வெ.ரா.வைச் "சொல்லடி நாயனுர்" என்று குறிப்பதையும் கடுமையாக விமர்சித்து "வேஷங்கள் - சி.ஐ.ஏயும் நவீன மதப் பிரச்சாரங்களும்" என்று சாடியுள்ளதற்கு தந்த விளக்க மடல்.]

1. இப் புவிப்பரப்பில் ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களின் பசி போக்கிட நிலேயான தத்துவமும், செயல் சித்தாந்தமும் கம்யூனிசம் என்ற பெயரில் வழங்கப் பட்டுள்ளது. இதனே உருவாக்கிய **<u>கார்ல் மார்ச்சு</u>** 'பழைய ஏற்பாடு' என்ற கிறித்துவ வேதத்தில் (Old Testament) விண்ணவர்களிடமிருந்து **"பத்து தெய்வீகக் கட்டளேகளேப்"** (The Ten Commandments) **பெற்று வந்த மோசேயின் (Moses) மறு அவதாரமே.**

2. "…. சமுதாய ஏற்றத்தாழ்வு, வேறுபாடு, பகை, சுரண்டல், பசித்தோர் துன்பம் … முதலியவைகளேத் தீர்ப்பதுதான் தந்தையாகிய இறைவனுக்கு நன்றி செலுத்துவதாகும் ….. என்ற வசனத்தை வாழ்நாள் முழுவதும் முழக்கி, சிலுவையில் மாண்டு, பரமண்டலத் தந்தையால் மீண்டும் உயிர்த்தெழுந்த **தேவ குமாரரான இயேசுவின் மறு அவதாரமே** பாட்டாளி வர்க்கத்தின் இல்லாமை, இயலாமை, வறுமைக் கொடுமைகளே அகற்றிடப் புரட்சி செய்து வெற்றி பெற்ற **புரட்சிப் பெருவீரர் <u>விளாதிமிர் இலீச் இலெனின்</u> ஆவார்**.

3. உலகின் உறங்கும் மனிதரான சீனர்களை உசுப்பி எழுப்பி உலகின் இரண்டாவது மாபெரும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரப் பேரரசை நிறுவிய **மாசேதுங்கின்** அக, புற வாழ்வியல்கள், அவர் **சித்தர்களில் ஒருவரான போகரின் மறு அவதாரமே!** என்ற பேருண்மையினைத்தான் விளக்குகின்றன.

மேற்கூறிய மூன்று கருத்துக்களையும் வழங்கியவர் அமெரிக்க உளவாளிகளோ! சி.ஐ.ஏ. நிறுவனத்தாரோ! மதப் பிரச்சாரகரோ! வேடதாரியோ! முதலாளித்துவ கூலியோ! மத வெறியரோ! மூடநம்பிக்கை மிகுந்த அப்பாவியோ! அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல!

ஆனால் இம்மண்ணுலகம் வியக்க மாபெரும் புரட்சி செய்து ஏழை எளிய பாட்டாளிப் பாமரர் துயர் துடைக்கச் சோசலிச அரசை நிலைநாட்டிய புரட்சித் தலைவர் விளாதிமிர் இலீச் இலெனினின் பெரும் பாராட்டுதலுக்கும், அன்புக்குமுரிய மிக நெருக்கமான நண்பர் அறிவியல் மேதை, 'உலகக் கம்யூனிச இயக்கம்' (The International Communist Party) என்ற ஓர் அமைப்பை திரு. இலெனின் புரட்சியில் வெற்றி காணும் முன்பே செக்கோசுலோவேக்கியா நாட்டை மையமாகக் கொண்டு அமைத்த பொதுவுடமைச் சித்தாந்தச் செயல்வீரர், 'பகுத்தறிவுக் குடியரசு இயக்கம்' (The Radical Democratic Party) அமைத்தவர்.... என்ற புகழுக்கும், சிறப்புக்களுக்குமுரிய திரு.எம்.என்.இராய் அவர்களேயாவார். இரசியப் புரட்சியிலும் பங்கு பெற்றவர் இவர்.

இவரைத்தான் திரு இலெனின் அவர்கள் சீனப்புரட்சித் தலைவரான மாசேதுங்குக்கு வழிகாட்டியாக அனுப்பினார். இவரைச் சீனக் கம்யூனிச இயக்கச் சிற்பிகளுள் ஒருவர் என்று பாராட்டும் மரபு இன்றும் இருக்கிறது. இவர், மிகப் பெரிய பகுத்தறிவு வாதி, அறிவியல் மேதை என்பதால் அணு ஆராய்ச்சித் தந்தை டாக்டர் ஐன்சுடீனின் நண்பர். இவர் அந்த விஞ்ஞானியோடு சேர்ந்து "உலக மத

ஆய்வுக் குழு” (The World Religious Research Society) என்ற ஒன்றை நிறுவினர். இவரது நெருங்கிய நண்பரே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஈடு இணையற்ற இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை. (M.P.PILLAI and M.N.ROY founded The International Communist Party, The Radical Democratic Party and The Study Circle of the Main Camps). இந்தச் சித்தர் காகபுசுண்டர் எழுதியுள்ள ‘கார்ல் மார்ச்சு வரலாறு’, ‘திரு. இலெனின் வரலாறு’, ‘திரு. சுடாலின் வரலாறு (Stalin)’, ‘திரு. மாசேதுங் வரலாறு’, ‘இரசியப் புரட்சி வரலாறு’, ‘சீனப் புரட்சி வரலாறு’, ‘இந்தியாவில் புரட்சி ஏன்? எப்போது? எப்படி?’ (மூன்று தொகுதி), ‘இந்தியாவில் புரட்சிக்குப் பின்’ (நான்கு தொகுதி), ‘தோழர் எம்.என்.இராயின் வரலாறு’, ‘இந்திய மண்ணில் மார்க்சீய மரணம்’, ‘தெலுங்கானுப் புரட்சி’, ‘இராசகோபாலாச்சாரி தமிழக மார்க்சீயச் சிந்தனைக்கு கட்டிய சமாதி’ .... முதலிய பல நூல்களில் உள்ள கருத்துக்களை விமர்சிக்க புகுந்திடுபவர் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், இதைச் சார்ந்த பல அமைப்புக்களையும் என்னென்ன கூறுவாரோ தெரியவில்லை.

“.... எல்லா மனிதரும் உழைப்பின் பயனை பகிர்ந்துண்டு போரற்ற ஒற்றுமையான அமைதி வாழ்வு வாழச் சிந்தித்த கார்ல் மார்க்சின் சிந்தனைகளை விடப் பதினெண்சித்தர்களின் சிந்தனை மிகுந்த பகுத்தறிவுப் போக்கும், பொதுநல நோக்கும், தீவிரச் சித்தமும் உடையது! உடையது! உடையது!...” என்ற பேருண்மையை உணர்ந்தால் கார்ல்மார்க்சுக்கு நவநாத சித்தர் என்ற பட்டம் கொடுக்கப் பட்டது சரியானது! முறையானது! நேர்மையானது ... என்று புரியலாம்.

எங்களுடைய இயக்கம் “இந்து மறுமலர்ச்சி இயக்கம்”. இதன் கீழ் “அருட்பணி விரிவாக்கத் திட்டம்”, “உலக அருளாளர் திருச்சபை”, “அருளுலக ஆர்வலர் கழகம்”, “கடவுளை வழிபடுவோர்

கழகம்", "உலக மத ஆய்வுக் குழு", ... என்று பல அமைப்புக்கள் இருக்கின்றன.

இவையனைத்தும் இந்தியாவில் மட்டுமின்றி உலகம் எங்கும் 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைய வேண்டுமென்று பாடுபடுகின்றன. இத்துடன் மடமையற்ற, மூடநம்பிக்கையற்ற, கண்மூடிப் பழக்க வழக்கங்களற்ற, பயனற்ற சாத்திறச் சம்பிறதாயங்கள் இல்லாத, தேவையற்ற சடங்குகள் இல்லாத, சுரண்டலற்ற, ஏமாற்றலற்ற, சர்வாதிகாரமற்ற, தன்னலமற்ற, ஊழலற்ற, பகுத்தறிவுப் போக்குடைய, விஞ்ஞான நோக்குடைய **உண்மையான இந்து மத**த்தை உலகுக்கு அறிவித்து அதனை மறுமலர்ச்சி அடையச் செய்வதே இவற்றின் நோக்கம். ஏனெனில், இந்து மதத்தின் மூலம்தான் 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை' உண்டாக்க முடியும்.

**உலகம் முழுவதுமுள்ள எல்லா இனங்களும் விடுதலையோடு, மொழியுரிமையோடு, பண்பாட்டுத் தன்னுரிமையோடு, நாகரீகப் பாதுகாப்போடு கூடி வாழும் கூட்டாட்சி முறையை உருவாக்க வேண்டும். அரசியலே இல்லாமல் நேர்மையான வலிமையான சமுதாயக் கட்டமைப்புக்களோடு மட்டுமே மக்களாட்சி நிகழ்ந்திடல் வேண்டும்** என்ற சமுதாயச் சிந்தனையாளர்களான பதினெண்சித்தர்கள் படைத்ததே **இந்து மதம்**. தாங்கள் மேலைய நாட்டு மதங்களை மயக்கப் பொருள் என்று கார்ல் மார்க்சு கண்டித்த அதே வாசகத்தை இந்து மதத்திற்கும் பயன்படுத்துவது பொருத்தமாகாது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்த போது இங்குள்ளவற்றை தங்களுடைய ஆங்கில மொழிச் சொற்களால் குறிக்க ஆரம்பித்தார்கள். கவிஞர்களை Poets, ஓவியர்களை Artists, நடனமாடுபவர்களை Dancers, பாடுபவர்களை Singers, சொற்பொழிவாளர்களை Orators என்று தங்கள் மொழிச் சொற்களிலேயே குறித்துக் கொண்டார்கள். இதை

யாரும் தவறென்று மறுக்க முடியாது. இது அவர்களுடைய மொழி உரிமை.

இதைப் போலவே மேலை நாட்டில் பதினெண்சித்தர்களின் **'மக்களின் தொண்டே மகேசன் தொண்டு'** என்ற தத்துவத்தின் முழுமையான விளக்கமாகவும், முறையான செயல்வடிவமாகவும் கம்யூனிச சித்தாந்தம் என்ற பெயரிலே வெளியிட்ட 'கார்ல் மார்க்சை' தமிழ்மொழிக்கே உரிய இத்தத்துவ விளக்கச் சொல்லான 'நவநாத சித்தர்' என்ற சொல்லால் குறித்திருப்பதில் என்ன தவறு? கார்ல் மார்க்சின் கருத்துக்கு தமிழ்மொழியில் இடப்படுகின்ற பெயர்தான் நவநாத சித்தரியல் (or) நவநாத சித்தரிசம். எனவே, கார்ல் மார்க்சைப் பற்றிய தவறான கருத்தைப் பரப்புவதற்காக அவரை நவநாத சித்தர் என்று பெயரிடவில்லை.

இதேபோல் தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களால்தான் வடஆரியர்களின் ஆபாசக் கற்பனைகள், மூடப் பழக்க வழக்கங்கள், சுரண்டல்மிகு சாத்திரச் சம்பிறதாயங்கள், அண்டப் புளுகுகள், ஆகாயப் பொய்கள், ஆபாசப் பொய்கள் நிறைந்த வேதநெறி மிகுந்த இந்துமதத்தைப் பதினெண்சித்தர்களின் பகுத்தறிவு நிறை இந்துமதமாக மாற்ற முடிந்தது.

இந்துமதத்தில் வடஆரியர்களின் வேதநெறியால் நிகழ்ந்து வந்த சூழ்ச்சிகள், சுரண்டல்கள், ஏமாற்றுக்கள், அடிமைமுறைகள், முதலாளித்துவ போக்குகள், ... முதலிய அனைத்து கேடுகளும் சிந்தனைச் சிற்பி, பகுத்தறிவுப் பகலவன், பெரியார் ஈ.வெ.ரா.வால்தான் ஒழிக்கப் பட்டன. இந்துமதத்தில் இருந்து வந்த சைவ-வைணவச் சண்டை (அ) போராட்டம் பெரியார் ஈ.வெ.ரா.வால்தான் முடிவுக்கு வந்தது, அமைதியை அடைந்தது. இதுபோல், **இந்துமதத்துக்கு எண்ணற்ற நன்மைகளும், பயன்களும் பெரியார் ஈ.வெ.ரா.வால்தான் ஏற்பட்டது.**

பெரியார் ஈ.வெ.ரா.தான் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும், தமிழர்தான் அர்ச்சகராக இருக்க வேண்டும், கோயில் நிர்வாகம் தமிழரிடம்தான் ஒப்படைக்க வேண்டும் என்றெல்லாம் போராடினார். எனவேதான், பெரியார் ஈ.வெ.ரா.வை 64வது நாயனாராக அறிவித்தோம். இதில் தவறு ஏதும் இல்லை.

இன்னும் சொல்லப் போனால், கடைசித் தமிழன் உயிரோடு உள்ள வரை நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கும் தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வை கோயிலுக்குச் செல்லுபவர்கள் கூட நாயனார்கள் வரிசையில் கண்டு வழிபட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் எப்படித் தவறாகும்? புரிய முற்படுக.

**//குருதேவர் அறிக்கை எண்: 8, 9.//**

# பழனியாண்டவர்

## பற்றிய குருபாரம்பரியச் செய்தி

"பதினெண்சித்தர்களின் 'சித்தர் நெறி' எனும் 'சீவநெறி'யான **மெய்யான இந்துமதக்** காலக் கணக்கீட்டுப் படி, இன்றைக்கு (1988க்கு) சரியாக 43,73,089 ஆண்டுகளுக்கு முன்னால்; அனாதிக் காலத்தில் வாழ்ந்திட்ட பழனியை ஆண்ட அனாதிகாலப் பதினெண்சித்தர் பீடாதிபதிகளில் ஒருவர் வெட்டவெளிக் கருவறை கொண்டருளு தேவராகப் பழனி மலை மீது நின்ற அருட்கோலமே **பழனியாண்டவர் திருக்கோலம்**. இந்த அனாதிகாலப் பீடாதிபதியின் மீது மக்களுக்கு பத்தி ஈடுபாடு அதிகமாகும் போதே மத மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், மத ஆட்சி மீட்சியும் விளையும்."

**- குருபாரம்பரியம்**

**//மூலம்: குருதேவர் அறிக்கை 42-48//**

# மூன்றாவது விடுதலை

## தலைமைப் பொறுப்பாளர்

இந்த நாட்டில் இதுவரை இரண்டு விடுதலைப் போர்கள் நடைபெற்று விட்டன. முதல் போரில் 'நாம் அடிமையாய் இருக்கின்றோம்!' என்பதை உணர்ந்தோம். இரண்டாவது போரில் நமக்கு நாமே அடிமையாக்கிக் கொள்ள முனைந்தோம். இந்த 1987ஆம் ஆண்டோடு நாற்பது ஆண்டுகள் ஆகி விட்டன; இன்னமும் நாம் நம்மைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை, சீர்தூக்கிப் பார்க்கவேயில்லை. நாம் இன்னமும் அடிமைகளாகத்தான் இருக்கின்றோம். பொருளாதார ரீதியாக, வணிக ரீதியாக, தொழில் ரீதியாக, கலை ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, மொழி ரீதியாக, ... நாம் மேலைய நாட்டானுக்கு அடிமையாகத்தான் உள்ளோம். நம்மை விட்டு அடிமை விலங்கு ஒடியவே இல்லை. இன்னும் காரிருள் விலகவேயில்லை.

இன்றைய இலங்கை முதல் அன்றைய அமெரிக்கச் சுதந்திரப் போர்கள் வரை உரிமை - விடுதலை துப்பாக்கி முனையிலேதான் பிறந்தது. ஆனால், நமது விடுதலையோ.....! அதனால்தான் என்னவோ நம்மை விட்டு அடிமை விலங்கு விலகவேயில்லை!

நாம் விடுதலை பெற்ற அந்த நாளின் அதிகாலையில் எத்தனையோ உள்ளங்கள் பூரித்து நின்றன. நாம் சாதிக்கப் போகின்றோம்! சாதிக்கப் போகின்றவைகளுக்கு வித்துக்களைத் தூவப் போகின்றோம்! என்று..... ஆனால், வருங்காலம் வளமான காலமாக மாறாமல் கற்காலமாகி விட்டது. நமது விடுதலை, இரசியாவின் பிப்ரவரி புரட்சியாக மாறி விட்டது. அக்டோபர் புரட்சியின் பயனைப் போல அறுவடை செய்யவே விழைகின்றோம்.

நாம் நம்மை மட்டுமா ஏமாற்றி வருகின்றோம்? வருங்கால இளைய சமுதாயத்தையும் அல்லவா ஏமாற்றுகின்றோம்? இன்றைய

இளைஞர்கள் நாட்டில் உலவும் அறியாமை பற்றியோ, வறுமையைப் பற்றியோ, இல்லாமை பற்றியோ, இயலாமை பற்றியோ, சாதிச் சண்டைகளைப் பற்றியோ, பெண்ணடிமை பற்றியோ, ... இன்ன பிற சமய சமுதாய அரசியல் சுரண்டல்களைப் பற்றியோ சிந்திக்கத் தயாராக இல்லை. நம்மைச் சுற்றி மேலும் மேலும் இறுகிக் கொண்டிருக்கும் உணர்வுகளின் அடிமைத் தளைகளை உணரவே இல்லை.

அதைவிட **நாட்டில் நல்லதொரு எதிர்க்கட்சியே இல்லை** என்பதை அறிய மறந்து விட்டோம். **எந்தத் துறையிலுமே எதிரணிகள் இல்லை.** இந்த நிலை நீடித்தால் .......? நாட்டின் ஒற்றுமை, பாதுகாப்பு, இன உரிமை, மொழி உரிமை, ... இவைகளை மீண்டும் அடகு வைக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இதற்குத் தேவை மூன்றுவது அணி அல்லது இயக்கம். மூன்றுவது இயக்கத்தின் தலைமைதான் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை, உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை அமைக்க வேண்டும். அதற்குரிய இளைஞரணியை அமைத்திடும் பணியில்தான் ஈடுபட்டுள்ளது **'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'**.

கல்வியின் பெயரால், மொழியின் பெயரால், மதத்தின் பெயரால், கலை தொழில் இலக்கியத்தின் பெயரால் நடைபெறும் சுரண்டல்களை, ஏமாற்றுக்களை முறியடிப்போம்! பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டு வாழ்க்கையைத் திசை திருப்பிச் சிந்திக்கவொட்டாமல் சதி செய்யும் தீய சத்திகளை முறியடித்து நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற தேவை மூன்றுவது விடுதலைப் போராட்டம்.

\- சி.கவிக்குமார்

**//மூலம்: குருதேவர் அறிக்கை 31.//**

# பதினெண்சித்தர்கள் சுட்டிக் காட்டும் பாவப் பட்டியல்

1. குரு துரோகம், விரோதம்.
2. குருவைப் பழித்தல், அழித்தல், இழித்தல்.
3. குருவாணை மறத்தல், துறத்தல், மறுத்தல், வெறுத்தல், மீறல், எதிர்த்தல்.
4. பூசைகளுக்கு இடையூறு செய்பவர்கள்.
5. ஞானியர் பிச்சையைப் புறக்கணித்தல்.
6. வழிபாட்டு நிலையங்களைச் சிதைத்தல், நலக்கேடு செய்தல்.
7. பொதுச் சொத்தை முறைகேடாகப் பயன்படுத்துதல்.
8. கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் எனும் அருட் சாலைகளையும், சோலைகளையும், பாட்டைகளையும், கோட்டைகளையும், பள்ளிகளையும் தடுத்தல், கெடுத்தல்.
9. ஈன்ற மகவுக்குத் தன் பால் தர மறுக்கும் தாய்.
10. தன்னை நம்பிப் போக இன்பம் துய்த்து மகிழ்ந்தவரைக் கொலை செய்தல் - ஒரே ஒரு முறை போக இன்பம் துய்த்தவர்களானாலும் ஒருவரை யொருவர் பாதுகாக்கும் கடமையைப் பெற்றவராவர்.
11. விலங்கினங்களுக்குத் தாகமறிந்து நீரும், பசியறிந்து தீனியும் தராமல் வெயிலில் கட்டி வைப்பவரும், தொடர்ந்து வேலை வாங்குபவரும், அடித்துத் துன்புறுத்துபவரும் ...

12. பொருட்பெண்டிர், போக இன்பத்தில் பங்கு பெறுமல் பொருளுக்காக உடலை விற்பவர்.

13. மூத்தோர்களையும், முன்னோர்களையும் மதியாமல் திட்டுவதும், போற்றிப் பேணுமல் கை விட்டு விடுவதும்.

14. அச்சுறுத்திப் பொன்னையும், பொருளையும் பறிப்பவர்; இச்சகம் பேசிப் பொன்னையும், பொருளையும் ஏமாற்றிப் பெறுபவர்.

15. நஞ்சு வைத்து நம்பியவரைக் கொலை செய்தல்.

16. பெண்ணின் ஆசையை மறுப்பதும், மறப்பதும், வெறுப்பதும், துறப்பதும்.

17. குடிநீர் நிலைகளைப் பாழ்படுத்தலும், உண்ணும் பொருளை வீணுக்குவதும்.

18. மனச்சாட்சியின்றி வாழுவது.

எனும் பதினெட்டும் பதினெண்சித்தர்களால் தண்டனைக்குரிய பாவங்களாக, குறைகளாக, கறைகளாகப் பட்டியலிட்டுக் காட்டப் படுகின்றன.

**- குருபாரம்பரியம்.**

**//மூலம்: குருதேவர் அறிக்கை எண்: 28//**

# அருளாட்சி உறுதிமொழிகள்

1. அண்டபேரண்டங்கள் அனைத்தின் தோற்றமும், முடிவும், இயக்கமும், பண்பும் இயற்கையே!

- ஆமாம், ஆமாமென்கிறேன், ஆமென்பேன்.

2. அருவ, அருவுருவங்களே பயிரினங்களாகவும், உயிரினங்களாகவும் தோன்றி வளர்ச்சி பெறுகின்றன.

- ஆமாம், ஆமாமென்கிறேன், ஆமென்பேன்.

3. இம்மண்ணுலகில் பயிரினங்களும், உயிரினங்களும் முறையான, நிறையான வாழ்வு பெறவே பதினெண்சித்தர்கள் இந்துமதத்தைத் தங்களின் தாய்மொழியான தெய்வத் தமிழில் வழங்கினுர்கள்.

- ஆமாம், ஆமாமென்கிறேன், ஆமென்பேன்.

4. மணிசர்களாக இருந்தவர்களே மனிதர்களாக்கிய சித்தர் நெறி எனும் இந்து மதமே இம்மண்ணுலகின் முதல் மதம், மூல மதம், தாய் மதம்.

- ஆமாம், ஆமாமென்கிறேன், ஆமென்பேன்.

5. பதினெண்சித்தர்களின் கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளுமே நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினராகவும், வழிபடு நிலையக் கருவறை மூலவர்களாகவும் உள்ளனர்.

- ஆமாம், ஆமாமென்கிறேன், ஆமென்பேன்.

6. பதினெண்சித்தர்களின் அருட்பயிர் விளைச்சலின் நாற்றங்கால் தமிழகமே.

- ஆமாம், ஆமாமென்கிறேன், ஆமென்பேன்.

7. பதினெண்சித்தர்களின் அருட்பயிர் விளைச்சலுக்குரிய தண்ணீர் தமிழ் மொழியே.

- ஆமாம், ஆமாமென்கிறேன், ஆமென்பேன்.

8. பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகப் பசிகளையும், வேட்கைகளையும், வெறிகளையும் தீர்த்து வைக்க விளைவித்த அருள் பயிர் தமிழர்களே.

- ஆமாம், ஆமாமென்கிறேன், ஆமென்பேன்.

**//மூலம்: குருதேவர் அறிக்கை எண்: 20//**

**மனிதர்கள் தவங்களின் விடாமுயற்சியாலும், அரிய பயிற்சியாலும், நேரிய செயல்களாலும் படிப்படியாக உயர்ந்து கடவுள் நிலையை அடையலாம் என்பதே பதினெண் சித்தர்களின் தத்துவம்.**



**கடவுள் என்றொரு தனிப்பட்ட தலைவன் கிடையாது. அப்படி ஒருவனைக் கற்பனை செய்து கொண்டு அவனுக்குக் காலம் முழுவதும் அடிமையாக வாழ்ந்து நரகத்தினின்று தப்பித்துக் கொள்ள நினைப்பது மடமை.**

**அதனால் பாவத்துக்கு அஞ்சிக் கெஞ்சியோ! புண்ணியத்துக்கு ஆசைப்பட்டு வேண்டியோ! பூசை, வேள்வி, தவம், ஓகம் முதலியவைகளைச் செய்யத் தேவையில்லை.**

**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** (கி.பி.785 - கி.பி.1040) வழங்கும் குருபாரம்பரியம்.



அம்மையப்பர்

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org**
**Email: indhuism@gmail.com**